[திரு. எஸ். கண்ணப்பன்] [1995 ஏப்ரல் 20

ஏற்கனவே தெரிவித்ததைப் போல பார்ட்-2 திட்டத்தின் கீழே முன்னுரிமையின் அடிப்படையில் சில பாலங்கள் எடுக்க வேண்டி இருந்ததன் காரணமாகத்தான் எடுக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்தேன். ஆகவே, இது ஏதோ நிரந்தரமாக விடுபட்டு போனது என்பது அல்ல. வேறு திட்டங்களில் ஏதாவது எடுக்க வேண்டுமானால் நிதி துறையோடு கலந்து ஆலோசித்து நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளோடு நம்முடைய பொதுப் பணித்துறை செயலாளரோடு கலந்து ஆலோசித்து இந்த சாலையினுடைய முக்கியத்துவம் கருதி அது சம்பந்தமான பிரச்சினையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே இதை அரசு கவனித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கோவையில் பழுதடைந்த பால் விற்பனை மைய பூத்துகளைப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கோவை மாநகராட்சிப் பகுதியில் பால் விற்பனை மைய பூத்துகள் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் அவைகளுக்குப் பதிலாக புதிய பூத்துகளை அமைக்க வேண்டியது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கோவை மாநகராட்சிப் பகுதியில் 170 பால் விற்பனை பூத்துகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 50 பால் பூத்துகள் நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள 120 பால் பூத்துகள் பழுதடைந்து உள்ளன. அவைகளில் 60 பால் பூத்துகள் உடனடியாக பழுது பார்க்கப்படும். எஞ்சியுள்ள 60 பால் பூத்துகள் மே 1995-ல் பழுது பார்க்கப்படும்.

1995 ஏப்ரல் 20]

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய அறிக்கையில் இப்போதுள்ள மொத்த 170 பூத்துகளில் 120 பூத்துகள் பழுதடைந்துள்ளதாகவும், அதில் 60 பூத்துகளை உடனே ரிப்பேர் செய்வதாகவும் மற்ற பூத்துகளை மே மாதத்திற்குள் ரிப்பேர் செய்து விடுவதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பூத்துகளை ரிப்பேர் செய்வதற்கு பதிலாக புதிதாக நவீன பூத்துகளாக அங்கே மாற்றி அமைப்பதற்கு ஒருசில இடங்களில் சென்னையில் இருப்பது போல் தானியங்கி பால் பூத்துகளை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு நேற்றையதினம் அவர்களுடைய மானியத்தில் பதிலுரையில் இன்றைக்கு பால் வழங்குகின்ற 24 லட்சம் கூட்டுறவு உறுப்பினர்களுக்கு, தமிழக மக்களுக்கு, லிட்டருக்கு ஒரு ரூபாய் பால் விலையை உயர்த்திக் கொடுத்ததற்கு இந்த நேரத்தில் பாராட்டுவதோடு, பாலை வாங்குகின்ற மக்களுக்கு ஒரு ரூபாய் உயர்த்தியிருந்தாலும் கூட ஒரு ரூபாய் 50 பைசா செலவில், ஒரு ரூபாயைத் தான் உயர்த்தி இருக்கிறார்கள். 50 பைசாவை குறைத்து, மீண்டும் அந்த துறையே அந்த 50 பைசாவைக் குறைத்துக் கொடுத்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பால் வழங்கும் பூத்துகளில் அதிகமான பெண்கள் வாங்குகின்ற காரணத்தால் அந்த பூத்துகளை புதிதாக அமைக்கும்போது அங்கே பெண்களை அந்தப் பணியாளர்களாக நியமிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் முன்வந்தால் அவர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கப்படும்.